**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-4 | Date | : 06.02.2025 |
| Case No. | : **O.S.494/2019** | Nationality | : Indian |
| Name | : முருகன் | Religion | : |
| Father's/Husband's Name | : கிருஷ்ணமூர்த்தி | Age | : 58 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.4</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கினை வாதிகள் எப்போது தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும் 4 ம் வாதி அஜித்குமாரும் ஒரே கட்சியில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் துகிலி அம்மாபேட்டை கஸ்தூரி பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிமிடெட்டில் தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். 5 வருடங்கள் தலைவராக இருந்தேன். எனக்கு தொழில் நெசவு என்றால் சரிதான். தற்போது நெசவு தொழில்தான் செய்து வருகிறேன் என்றால் சரிதான். கோவிந்தராஜ்க்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அதில் முதல் மனைவி இறந்துவிட்டார். முதல் மனைவி பெயர் சகுந்தலா. அவர் இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும். கோவிந்தராஜின் வாரிசு சான்றை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கோவிந்தராஜ்க்கு எங்கே என்னென்ன சொத்துக்கள் என்னென்ன சர்வே எண்களில் என்ன விஸ்தீரணத்தில் உள்ளது எனக்கு

தெரியாது என்றால் சரிதான். கோவிந்தராஜின் சகோதரர்தான் ஆசிரியர் ராமலிங்கம் என்றால் சரிதான். அந்த ராமலிங்கத்தின் மகன் பிரதிவாதி சதீஷ்குமார் என்றால் சரிதான். எனக்கு பசலி என்றால் என்னவென்று தெரியுமா என்றால் கிராம நிர்வாக அலுவலர் சான்றில் போடுவார்கள் அது என்னவென்று தெரியாது. எனக்கு சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. கோவிந்தராஜின் சொத்துக்களை யார் யார் என்னென்ன விஸ்தீரணத்தில் என்ன சாகுபடி செய்து வருகிறார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அஜித்குமார்தான் செய்து வருகிறார். அஜித்குமார் என்ன சர்வே எண்ணில் கண்ட எவ்வளவு விஸ்தீரணமுள்ள சொத்தினை சாகுபடி செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது என்றால் மொத்த சொத்தையும் அவர்தான் சாகுபடி செய்து வருகிறார். சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி எவ்வளவு விஸ்தீரணமுள்ள நிலத்தில் குத்தகை சாகுபடி செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது என்றால் குத்தகை சாகுபடி கிடையாது அனைத்து சொந்த நிலம்தான். 4 ம் பிரதிவாதியின் சொந்த நிலத்திற்கான ஆவணம் எதையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணமுள்ள என்ன சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

2. பிரதிவாதியின் தகப்பனார் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கும் பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை என்று வாதிகள் கேட்டு கொண்டதின்பேரில் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கே நன்றாக தெரியும். நான் வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிக்கு சொத்தில் உரிமையில்லை என்று மறுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ராமலிங்கம் எப்போது இறந்தார் என்றால் 1 வருடத்திற்குள் இறந்திருப்பார். அவர் ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற

விவரம் எனக்கு தெரியும். 4ம் பிரதிவாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.02.06 18:20:10 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.